வடக்கு.மா.பொ.சே.ஆ.குழு சுற்றறிக்கை இல : 13/2021

எனது இல : **NP/07/10/02/180**
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்,
யாழ்ப்பாணம்.
20.07.2021

செயலாளர், சுகாதார சுதேச வைத்தியதுறை அமைச்சு,
பணிப்பாளர், சுகாதார சேவைகள் திணைக்களம்,
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்,
திணைக்களத் தலைவர்கள்,
வடக்கு மாகாணம்.

**வடக்கு மாகாண பொதுச்சேவையின் சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கீழ்வரும் ஆரம்ப மட்டம் பகுதியளவில் தேர்ச்சிபெற்ற சேவை ஊழியர்களுக்கான (PL -2-2006(A)) 1ம், 2ம் மற்றும் 3ம் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை – 2016 (2021)**

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கீழ்வரும் ஆரம்ப மட்டம் பகுதியளவில் தேர்ச்சிபெற்ற சேவை ஊழியர்களுக்கான (PL -2-2006(A)) சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு அமைவாக குறித்த சேவையின் கீழ்க்குறிப்பிடப்படும் பதவியில் உள்ள அலுவலர்களுக்கான 1ம், 2ம் மற்றும் 3ம் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையானது செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு அவர்களினால் நடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

| பதவிப் பெயர் | பதவி இல |
|---|---|
| குழாய் பொருத்துநர் (Plumber) | 01 |
| பம்ப் இயக்குநர் (Pump Operator) | 02 |
| தச்சுத் தொழிலாளி(Carpentor) | 03 |
| கட்டிடத்தொழிலாளி(Mason) | 04 |
| சமையலாளர் (Cook) | 05 |
| தையற்காரர் (Seamstress) | 06 |
| ஆய்வுகூடஊழியர் (Laboratory Employee) | 07 |
| ஆண் /பெண் பரிசாரகர் (Male / Female Attendant) | 08 |
| தொலைபேசி இயக்குநர் (Telephone Operator) | 09 |
| வைத்தியசாலை கண்காணி (Hospital Overseer) | 10 |
| அவயவ பொருத்துனர் (Limb Maker) | 11 |

02.0 **தகைமைகள் :** குறித்த பதவிகளுக்கான சேவைப்பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அச்சேவையில் குறித்த வகுப்பில் நியமனமொன்றை / பதவியுயர்வைப் பெற்றுள்ள மற்றும் இதுவரை இப்பரீட்சையினை பூரணப்படுத்தியிராத அலுவலர்கள் இப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமையுடையவர்களாவர்.

03.0 விண்ணப்பமானது இச்சுற்றறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவ உருவில் அமைதல் வேண்டும். பரீட்சார்த்திகள் அம்மாதிரி விண்ணப்பப் படிவத்தின்படி தமது விண்ணப்பங்களைத் தயாரித்துக் கொள்ளல் வேண்டியதுடன் அவ்வாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களைத் தமது திணைக்களத் தலைவர் ஊடாக 2021.08.06 ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியவாறு **“செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல: 393 / 48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்”** எனும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கும் கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் பரீட்சையின் பெயரினைக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னராகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் உரிய தகவல்களைப் பூர்த்திசெய்யாத விண்ணப்பங்களும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

*04.0* **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம் :-**

பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தங்களது ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுகின்றனர். ஆளடையாளத்தை நிரூபிப்பதற்கு பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.
(iii) செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்

மேற்குறிப்பிடப்பட்ட ஆவணமொன்றை பரீட்சைக்கு தோற்றும்போது சமா்ப்பிக்கத்தவறும் பரீட்சார்த்தியொருவரின் பரீட்சார்த்தி உரிமை செயலாளர் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம் அவர்களின் தற்றுணிபின்படி இரத்துச் செய்யப்படலாம். பரீட்சை நடாத்துதல் தொடர்பாக வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும்.

*05.0* **விண்ணப்பங்கள் :-** இல *1* முதல் *6* வரையிலான பந்திகள் முதலாம் பக்கத்திலும் ஏனைய பந்திகள் இரண்டாம் பக்கத்திலும் உள்ளடங்கும் வண்ணம் A4 அளவினதான தாளில் விண்ணப்பமானது கணினியில் தயார் செய்யப்பட்டு பரீட்சார்த்தியின் சொந்தக் கையெழுத்து மூலம் சரியாகவும், தெளிவாகவும் பூரணப்படுத்தப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவமானது இத்துடன் உள்ள மாதிரிப்படிவத்திற்கேற்ப தயார் செய்து விண்ணப்பித்தல் வேண்டுமென்பதுடன் விண்ணப்பப் படிவத்தின் நிழற்படப்பிரதி மற்றும் முன்னோட்டப் பிரதி என்பன அனுப்பிவைத்தலாகாது என அறிவுறுத்தப்படுகிறது. மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு ஏற்புடையதாகாத மற்றும் முழுமை பெறாத தகவல்களைக் கொண்டுள்ள விண்ணப்பங்கள் அறிவிப்பேதுமின்றி நிராகரிக்கப்படும். தரப்பட்டுள்ள பரீட்சை அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக இருப்பது தொடர்பில் பரீட்சார்த்தியே கூடிய கவனம் செலுத்துதல் வேண்டும் என்பதுடன் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.

*06.0* **பரீட்சைக் கட்டணம்:-**

*6.1* முதன்முறையாக இப்பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் பரீட்சைக்கட்டணம் எதுவும் செலுத்த வேண்டியதில்லை.

*6.2* ஏனைய பரீட்சார்த்திகள் ஒரே அமர்வில் ஒன்றிற்கு மேற்பட்ட பாடத்திற்குத் தோற்றுவதாயின் ரூபா **500/-**யும், ஒரு பாடத்திற்கு மட்டும் தோற்றுவதாயின் ரூபா **250/-**யும் செலுத்துதல் வேண்டும். இக்கட்டணத்தை வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள எந்தவொரு அஞ்சல் அலுவலகமொன்றிலும் செலுத்தலாம்.

*6.3* காசுக்கட்டளையானது **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்"** என்ற பெயருக்கு **யாழ்ப்பாணத் தபால் அலுவலகத்தில்** மாற்றக் கூடியவாறு பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

*6.4* விண்ணப்பதாரி காசுக்கட்டளையின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும். இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது என்பதுடன் கட்டணத்தை வேறு ஏதும் பரீட்சைக்கு மாற்றவும் முடியாது.

*07.0* விண்ணப்பங்கள் சமா்ப்பித்துள்ள அலுவலா்களுக்கு, வடக்கு மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளரினால் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்படும். பரீட்சார்த்தியொருவருக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டை வழங்குதலானது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான சகல தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளார் என்பதற்கான சான்று அல்ல என்பதைக் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் பரீட்சை மேற்பார்வையாளருக்குத் தங்களின் கையொப்பங்கள் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டைகளைச் சமா்ப்பித்தல் வேண்டும். அத்தகைய அனுமதி அட்டைகள் இல்லாமல் பரீட்சைக்குத் தோற்ற இடமளிக்கப்படமாட்டாது. எவரேனும் பரீட்சார்த்தி ஒருவருக்குப் பரீட்சைத் திகதிக்கு குறைந்தபட்சம் *3* நாட்களுக்கு முன்னரேனும் பரீட்சைக்கான அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடின் அவா் அது பற்றி பின்வரும் விபரங்களுடன் வடமாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

- கோரிக்கைக் கடிதம்,
- விண்ணப்பப் படிவத்தின் பிரதி,
- பணம் செலுத்திய காசுக்கட்டளையின் பிரதி,

- விண்ணப்பம் அஞ்சலிடப்பட்ட அஞ்சல் அலுவலகம், பதிவு இலக்கம், திகதி.
- அனுமதி அட்டை அனுப்பி வைக்கவேண்டிய தொலைநகல் இலக்கம் (Fax No),

*08.0* இப்பரீட்சைக்குத் தோற்றுகின்ற அலுவலர்களுக்கு, பரீட்சைக்குத் தோற்றக்கூடியவாறு திணைக்களத் தலைவர்களால் தாபனவிதிக்கோவையின் அத்தியாயம் XIIன் பிரிவு 19ற்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

*09.0* பரீட்சைக்குத் தோற்றிய சகல பரீட்சார்த்திகளினது பெறுபேறுகளும் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுச் செயலாளர் அவர்களினால் அனுப்பி வைக்கப்படும்.

*10.0* பரீட்சைத் திட்டம்.

*09.1* 1ம் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை

இப்பரீட்சையானது கீழ்வரும் பாடத்தை கொண்டது.

| பாடங்கள் | நேரம் | புள்ளிகள் | பெறவேண்டிய புள்ளிகள் | பாட இலக்கம் |
|---|---|---|---|---|
| பொதுச்சேவை ஆணைக்குழுவின் தாபனவிதிக்கோவை மற்றும் நடைமுறைவிதிகள் | 02 மணித்தியாலம் | 100 | 40% | 01 |

பாடத்திட்டங்கள்

1. தாபனவிதிக்கோவை *(பல்தேர்வு வினாக்களைக் கொண்ட வினாத்தாள்)*
   சேவை ஒன்றிற்கான ஆட்சேர்ப்பு, இடமாற்றம், விடுமுறைகள், புகையிரத ஆணைச்சீட்டு, பாதுகாப்பு ஆடைகள் மற்றும் சீருடைகள், நலச்சேவை வசதிகள், தொழிற்சங்க உறுப்பினர்களுக்கான சலுகைகள்.

2. நடைமுறை விதிகள்
   நியமனம், தகுதிகாண்காலம், பதில் கடமையும் நியமனத்தை உறுதிப்படுத்துதலும், வினைத்திறமைகாண் தடை மற்றும் தொழிற்சங்க நடவடிக்கைகளும்.

*09.2* 2ம் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை

இப்பரீட்சையானது பின்வரும் இரு பாடவிதானங்களைக் கொண்டது.

| பாடங்கள் | நேரம் | புள்ளிகள் | பெறவேண்டிய புள்ளிகள் | பாட இலக்கம் |
|---|---|---|---|---|
| தாபனவிதிக்கோவை மற்றும் நிதி ஒழுங்குவிதிகள் | 02 மணித்தியாலம் | 100 | 40% | 02 |
| விடய அறிவு | 01 மணித்தியாலம் | 100 | 40% | 03 |

பாடத்திட்டங்கள்

1. தாபனவிதிக்கோவை மற்றும் நிதி ஒழுங்குவிதிகள் (பல்தேர்வு மற்றும் கட்டமைப்பு வினாக்களைக் கொண்ட வினாத்தாள்)
   சேவை முடிவுறுத்தல், சம்பளம் மற்றும் விடுமுறைக்கொடுப்பனவுகள், பிரயாணச் செலவுகள், சம்பளக் கடன்கள் மற்றும் முற்பணங்கள், அங்கீகாரமளித்தல், அனுமதியளித்தல், சான்றுறுதிப்படுத்தல், கொடுப்பனவு, நட்டங்கள் மற்றும் விட்டுவிடுதல்.

2. பதவிகளுடன் தொடர்புடைய விடய அறிவு
   கடமை தொடர்பான விடயஅறிவு, கடமைகளில் எப்பொழுதும் பயன்படுத்தப்படும் உபகரணங்களின் பெயர் மற்றும் அவைகளைப் பேணுவதற்கான முறைகள், பதவிக்கு ஒதுக்கப்படும் கடமைகள் பற்றிய போதிய அறிவு மற்றும் தேர்ச்சியினைப் பெற்றுள்ளாரா என அறிதல்

*09.3 3ம் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை*

இப்பரீட்சையானது கீழ்வரும் பாடத்தை கொண்டது.

| பாடங்கள் | நேரம் | புள்ளிகள் | பெறவேண்டிய புள்ளிகள் | பாட இலக்கம் |
|---|---|---|---|---|
| விடய அறிவு | *01 மணித்தியாலம்* | *100* | **40%** | *04* |

பாடத்திட்டம்

1. விடய அறிவு (பல்தேர்வு மற்றும் கட்டமைப்பு வினாக்களைக் கொண்ட வினாத்தாள்) பதவிக்கு தொடர்புடைய விடயம் சம்பந்தமான பாதுகாப்பு, உடல்நலம் தொடர்பான அறிவு, நோயாளிகளுக்கும் மற்றும் தொழிலாளிகளுக்குமான உணவு வழங்கல், வைத்திய அறிக்கை, அனர்த்த முகாமைத்துவம், கழிவு அகற்றல் முகாமைத்துவம், தோட்ட உற்பத்தி, வைத்தியசாலைச் சூழல், மற்றும் சாதாரணமான தாபனக் கடமைகள் தொடர்பான எழுத்தறிவு

குறிப்பு :- இப்பரீட்சை தொடர்பான பாடவிதானங்கள் மற்றும் குறித்த பதவியிலுள்ளவர்களுக்கான கடமைகள் தொடர்பான விபரங்களுக்கு சேவைப்பிரமாணக் குறிப்பின் இணைப்பு 06,07,08,09ஐப் பார்வையிடவும்.

*10.0* இச்சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களினைத் தங்கள் அமைச்சின் / திணைக்களங்களின் /அலுவலகத்தின் கீழ்க் கடமையாற்றும் தொடர்புடைய அலுவலர்களுக்குத் தெரியப்படுத்துமாறு தயவுடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். மேலும் இத்தகவல்களை வடமாகாண இணையத்தளமான www.np.gov.lk எனும் முகவரியில் பெற்றுக்கொள்ள முடியும்.

**கவனிக்கவும்** :- இப்பரீட்சை அறிவித்தல் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட மற்றும் செய்யப்படாத எவ்விடயம் தொடர்பாகவும் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளரின் தீர்மானம் இறுதியானதாகும்.

சி.திருவாகரன்
செயலாளர்,
மாகாணபொதுச் சேவை ஆணைக்குழு,
வட மாகாணம்.